## 17–4–2013

## சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைப் பகுதி

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவி அவர்கள் பேசுகின்றபோது, எந்தக் கட்சியின் பெயரையும் குறிப்பிடவில்லை, எந்த குறிப்பிட்ட நபரையும் குறிப்பிட்டுச்சொல்லவில்லை. எந்தக் கட்சியின் தலைவரையும் குறிப்பிட்டுச்சொல்லவில்லை. தி.மு.க உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் என்றாலும், ஒரு கட்சியின் தொண்டர்கள். ஒரு தலைமையின்கீழ் செயல்படுகின்ற தொண்டர்கள். அவர்களுடைய தலைமை அவ்வளவு பலகீனமாக இருக்கின்றது என்று பொருள் (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், பொதுவாக ஒரு கருத்தைச் சொன்னால், எந்த கருத்தைச் சொன்னாலும் ஆட்சேபகரமான கருத்தைச் சொன்னாலும்கூட, அவர்கள் உடனேயே தங்கள் தலைமையை குறிப்பிட்டுச் சொல்வதாக நினைத்துக்கொள்கிறார்கள். இதே பலவீனம் பிரதான எதிர்க்கட்சிக்கும் உண்டு. ஒரு தலைமை எப்படி இருக்கக்கூடாது என்ற கருத்தைப் பற்றிச் சொன்னால் . .

உடனே தங்கள் தலைமையைக் குறிப்பிட்டதுபோல அவர்கள் நினைத்துக் கொள்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள் பேசியதில் எந்தத் தவறும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதை தங்களைப் பாதிக்கின்ற வகையில் தவறாக புரிந்து கொண்டு கற்பனை செய்பவர்களின் குற்றம்தான் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

. . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகம் தழைத்தோங்க வேண்டும், மரபுகள் காக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில், பேரவையில் நடைபெறும் விவாதங்களை துவக்கிவைக்கும் வாய்ப்பினை தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தாங்கள் அளித்தீர்கள். அவர்கள் தங்கள் கருத்துகளை எடுத்துரைக்கும் வகையில் அதிகமான நேரத்தையும் தாங்கள் ஒதுக்கினீர்கள். ஆனால், தே.மு.தி.க உறுப்பினர்களோ, தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தைவிட அதிகமான நேரம் பேரவையில் பேசிவிட்டு கடைசியில் தங்களுக்கு போதிய நேரத்தை ஒதுக்கவில்லை என்று தெரிவித்து வெளிநடப்பு செய்வதை வாடிக்கையாக கொண்டிருந்தார்கள்.

இதுமட்டுமல்லாமல், பேரவையின் மாண்பினை மாசுபடுத்தும் வகையிலும், தங்களையே கொச்சைப்படுத்தும்வகையிலும் அவையில் நடந்துகொணடார்கள். பேரவையின் ஒழுங்கையும், அமைதியையும் சீர்குலைக்கும் வகையிலோ, பேரவையின் கண்ணியத்தைக் குறைக்கும் வகையிலோ நடந்துகொள்ளும் சட்டமன்ற உறுப்பினர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்குரிய அதிகாரம் தங்களுக்கு உண்டு.

அதேபோன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 98–ன்கீழ் பேரவை உறுப்பினர்கள் உரையாற்றும் வரிசை முறையை நிர்ணயிக்கின்ற அதிகாரமும் தங்களுக்கு உண்டு. இவற்றின் அடிப்படையில், தே.மு.தி.க. உறுப்பினர்களின் ஜனநாயகத்திற்கு விரோதமான நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலும், அவையின் மாண்பினை பாதுகாக்கும் வகையிலும், தங்களுக்குள்ள பிரத்யேக அதிகாரத்தைப் பயன்படுத்தி, விதிகளுக்கும், நாடாளுமன்ற நடைமுறைகளுக்கும் உட்பட்டு, அவை நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவித்த தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர்கள், பேரவையில் நடைபெறும் விவாதங்களில் கடைசியாக

பேசவேண்டுமென்று தாங்கள் தீர்ப்பளித்தீர்கள். தங்களுடைய தீர்ப்பில் யாரும் குறுக்கிட முடியாது. இதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை.

இருப்பினும், எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்கள் இதுகாறும் கடைபிடிக்கப்பட்ட நடைமுறை தொடர்ந்து பின்பற்றப்படவேண்டும் என்று தெரிவித்து, பிரதான எதிர்க்கட்சியான தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர்களை விவாதங்களை துவக்கி வைத்துப் பேச அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் நேற்று இந்த அவையில் இதை வலியுறுத்தினார். ஜனநாயக மரபுகள் காக்கப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில் எதிர்க்கட்சிகளின் வேண்டுகோளினை ஏற்று, இதுகுறித்து தாங்கள் ஏற்கெனவே அளித்த தீர்ப்பினை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

. . .

**விதி 110–ன்கீழ் அறிக்கை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110–ன் கீழ் இரண்டு அறிக்கைகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு உடனுக்குடன் ஆதாயமான விலை கிடைக்கச் செய்தல் மற்றும் நுகர்வோருக்கு தரமான பாலினை நியாயமான விலையில் விற்பனை செய்தல் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் எனது தலைமையிலான அரசு தமிழ்நாட்டில் கால்நடைகளின் எண்ணிக்கையை உயர்த்துவதன்மூலமும், பால் பண்ணைகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலமும் பால் கொள்முதலில் தமிழ்நாடு

முதலிடத்தை அடைவதற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

எனது அரசின் முனைப்பான நடவடிக்கைள் காரணமாக, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நாளொன்றுக்கு சுமார் 20 இலட்சம் லிட்டர் என்றிருந்த பால் கொள்முதல் தற்போது 24.36 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக வரலாற்றில் முதல் முறையாக 20—11—2012 அன்று 27.15 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து ஆவின் நிறுவனம் சாதனை படைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், புதுப் புது பால் உப பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, பால் பொருட்கள் உற்பத்தியும், விற்பனையும் கணிசமான அளவு தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருகிறது. இதன் காரணமாக, 2011—2012—ல் 2,791 கோடி ரூபாயாக இருந்த விற்பனை 2012—2013 ஆம் ஆண்டில் 3,584 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது தமிழ்நாட்டில் பால் கொள்முதல் அதிகரித்துள்ள நிலையில், மாவட்ட ஒன்றியப் பால் பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிக்கும் வகையிலும், பால் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் உறுப்பினர்களை ஊக்குவிக்கும் வகையிலும், 95 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பில் கீழ்க்காணும் பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்: (மேசையைத் தட்டும் ஒலி)

1. திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, வேலூர், விழுப்புரம், சேலம், தருமபுரி, திண்டுக்கல் மற்றும் காஞ்சிபுரம்—திருவள்ளூர் பால் கூட்டுறவு ஒன்றியங்களின் பால் பண்ணைகளில் உள்ள குளிர்விப்புத் திறன் வசதி; குளிரூட்டப்பட்ட பாலைச் சேமிக்கும் கொள் கலன்கள் வசதி; பாலை திடப்படுத்தும் வசதி; பாலிலிருந்து நுண் கிருமியை நீக்குவதற்கான வசதி, பாலிலிருந்து வெண்ணெயைப் பிரித்தெடுத்து சமன்படுத்தும் வசதி; பால் விற்பனை செய்ய ஏதுவாக குளிர்பதனக் கிடங்கின் கொள்ளளவை அதிகரித்தல் மற்றும் மின் இயக்குதிறன் ஆகியவை 20 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**2.** சென்னை மாநகரில் நாளொன்றுக்கு **10.20** இலட்சம் லிட்டராக இருந்த விற்பனை **11.25** இலட்சம் லிட்டராக அதிகரித்துள்ள நிலையில், (மேசையைத் தட்டும் ஒலி) பெருகி வரும் பாலின் தேவையைக் கருத்தில் கொண்டு, **37** கோடியே **90** இலட்சம் ரூபாய் செலவில் பால் கையாளும் திறன் கீழ்க்கண்டவாறு மேம்படுத்தப்படும்:

அம்பத்தூர் பால் பண்ணையில் சக்தி சேமிப்பு உயர்நிலை அழுத்தக் கருவிகள், பால் திடப்படுத்தும் கருவிகள், வெப்பம் ஊடுருவாத சுவர் மற்றும் தானியங்கி இயந்திரங்கள் **14** கோடியே **25** இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சோழிங்கநல்லூர் பால் பண்ணையில், மணிக்கு **6,500** லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட உச்ச வெப்ப நிலையில் பதப்படுத்தப்பட்ட பாலை நுண்ணுயிர் நுழையா பைகளில் அடைக்கும் இயந்திரம் **10** கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாதவரம் பால் பண்ணையில், சக்தி சேமிப்புக் கருவியுடன் கூடிய உறைநிலை நீர்த் தொட்டிக் கருவிகள், புதிய குளிர்விக்கும் கருவிகள் மற்றும் பசுமை பால் பண்ணை சார்ந்த திட்டங்கள் **5** கோடியே **60** இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மாநகர பால் பண்ணைகளில், உணவு பதப்படுத்துதல் திட்டத்தின்கீழ் குளிரூட்டம் செய்வதற்கான வசதிகள் **8** கோடியே **5** இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**3.** பால் உற்பத்தியாளர்களுக்கு பாலின் தரத்திற்கேற்ற விலை கிடைக்கும் வகையில், பாலின் தரம் அறிய உதவும் **6,500** பகுப்பாய்வுக் கருவிகள் **35** கோடியே **70** இலட்சம் ரூபாய் செலவில் படிப்படியாக வாங்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும்.

**4.** தரமான பாலினை தொடர்ந்து வழங்கிவரும் உறுப்பினர்கள் மற்றும் சங்கங்கள் கண்டறியப்பட்டு, "நட்சத்திர அந்தஸ்து" மற்றும் ஊக்கத் தொகை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி, சங்கங்களுக்கு தரமான பால் வழங்கும் உறுப்பினர்கள் ஒவ்வொரு

ஒன்றியத்திலும் தலா 300 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதல் நூறு பேருக்கு முதல் பரிசாக 3,000 ரூபாய், (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவது நூறு பேருக்கு இரண்டாம் பரிசாக 2,000 ரூபாய், (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றாவது நூறு பேருக்கு மூன்றாம் பரிசாக 1,000 ரூபாய் என ஊக்கத் தொகை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 6 இலட்சம் ரூபாய் என 1 கோடியே 2 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. இதேபோன்று ஒன்றியங்களுக்கு தரமான பால் வழங்கும் முதல் 10 சங்கங்கள் கண்டறியப்பட்டு, முதல் பரிசாக 25,000 ரூபாயும், (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாம் பரிசாக 15,000 ரூபாயும், (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றாம் பரிசாக 10,000 ரூபாயும், (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற ஏழு சங்கங்களுக்கு 5,000 ரூபாயும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென ஒரு ஒன்றியத்திற்கு 85,000 ரூபாய் என மொத்தம் 14 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேற்காணும் எனது தலைமையிலான அரசின் முனைப்பான நடவடிக்கைகள்மூலம் தமிழகத்தில் இரண்டாவது வெண்மை புரட்சி விரைவில் நிறைவேறும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆணும், பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவில் ஓங்கி இவ்வையகம் தழைக்குமாம்" என்ற மகாகவி பாரதியாரின் வாக்கிற்கிணங்க, பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், பெண்ணுரிமையை நிலைநாட்டும் வகையிலும் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், திருமண நிதியுதவித் திட்டங்கள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் என பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பெண் சிசுக் கொலையை முற்றிலும் ஒழிக்கும் வகையிலும், பெண் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்தும் வகையிலும், எனது ஆட்சிக் காலத்தில் 1992 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பதிவான பெண் குழந்தைகள்

பெயரில் 1,500 ரூபாய்க்கான வைப்புத் தொகை பத்திரங்கள் வழங்கப்பட்டன. பின்னர், 2001 ஆம் ஆண்டு இத்திட்டம் மாற்றி அமைக்கப்பட்டது. இதன்படி, ஒரு குடும்பத்தில் ஒரே ஒரு பெண் குழந்தை மட்டும் இருந்தால், அப்பெண் குழந்தையின் பெயரில் 22,200 ரூபாய் வைப்புத் தொகையும், இரண்டு பெண் குழந்தைகள் இருந்தால் ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் தலா 15,200 ரூபாயும் வைப்பீடு செய்யப்பட்டது. இந்தத் தொகை, 20 ஆண்டுகள் கழித்து வட்டியுடன் திருப்பி அளிக்கப்படும். தற்போது இந்தத் தொகை முறையே 50,000 ரூபாய் என்றும், 25,000 ரூபாய் என்றும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இந்தத் திட்டத்தின்கீழ் 1992 ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட பெண் குழந்தைகள் பெறும் முதிர்வுத் தொகை குறைவாக உள்ளதைக் கருத்தில் கொண்டும், இவர்களுக்கு தற்போது திருமண உதவித் திட்டத்தின் பயன் அளிக்கப்படவில்லை என்பதைக் கருத்தில் கொண்டும், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பயன் பெறுபவர்களுக்கு மற்ற திருமண உதவித் திட்டங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–35

இதன்படி, இவர்களுக்கு 4 கிராம் தங்கத்துடன் கல்வித் தகுதிக்கேற்ப திருமண உதவித் தொகையும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இது மட்டுமல்லாமல், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பதிவு செய்துள்ள பயனாளிகளின் வைப்புத் தொகைக்கான முதிர்வுத் தொகை அவர்கள் 20 வயது பூர்த்தி அடைந்தவுடன் வழங்கப்பட்டு வந்தது. இக்குழந்தைகளின் உயர் கல்விக்குப் பயனளிக்கும் வகையில், இந்த முதிர்வுத் தொகை இனிமேல் 18 வயது பூர்த்தி அடைந்தவுடன் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், நடப்பு நிதியாண்டில் 30,000 பெண்கள் பயனடைவர். (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோன்று, ஐந்து திருமண நிதியுதவித் திட்டங்களில், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான நிதியுதவித் திட்டம், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் மற்றும் ஈ.வே.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதியுதவித் திட்டம் ஆகியவற்றின்கீழ் நிதியுதவி பெற குடும்ப ஆண்டு வருமானம் 24,000 ரூபாய் என உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தக் குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு 24,000 ரூபாயிலிருந்து 72,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தாய் சேய் நலத்திற்கு வழிகாட்டும் திட்டமான ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் பணியாற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கு சனிக்கிழமை அன்றும், அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை அன்றும் விடுமுறை அளிக்கப்படுகிறது. அங்கன்வாடி உதவியாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களின் பணிகள் முற்றிலும் மாறுபட்டு ஒருவரையொருவர் சார்ந்து இருப்பதாலும், ஒருவருடைய வேலையை மற்றொருவர் முழுமையாக செய்ய முடியாத சூழ்நிலை உள்ளதாலும், இவர்களுக்கு வெவ்வேறு நாட்களில் விடுமுறை அளிப்பது நடைமுறையில் சாத்தியமற்றதாக இருக்கிறது. இதனைக் கருத்தில்கொண்டும், ஞாயிற்றுக்கிழமை அனைவருக்கும் பொது விடுமுறை என்பதாலும், அங்கன்வாடி ஊழியர்கள் அனைவரும் தங்களது குடும்பத்துடன் வார இறுதி நாளை மகிழ்வுடன் செலவிடும் வகையில், அவர்கள் அனைவருக்கும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அங்கன்வாடிகளில் சத்துணவு பெறும் 2 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட வேண்டிய சத்துணவு, வீட்டிற்கு எடுத்துச் செல்லும் வகையில் சமைக்கப்படாத உணவுப் பொருளாக குழந்தைகளின் பெற்றோர்களிடம் அங்கன்வாடி ஊழியர்களால் சனிக்கிழமை அன்றே வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இது மட்டுமல்லாமல், அங்கன்வாடி மையங்கள் மூலம் குழந்தைகள், வளர் இளம் பெண்கள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரின் எடையைக் கண்காணிக்கும் வகையில், தாய்மார்கள் மற்றும் வளர் இளம் பெண்களுக்காக 16,988 எடை பார்க்கும்

கருவிகளும், குழந்தைகளுக்கான 11,333 எடை பார்க்கும் கருவிகளும், பச்சிளம் குழந்தைகளுக்காக 54,439 எடை பார்க்கும் கருவிகளும், 7 கோடியே 11 இலட்சத்து 89 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வாங்கி எடை கருவிகள் இல்லாத அங்கன்வாடி மையங்களுக்கு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சமூக நலத் திட்டங்களின்கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கான ஓய்வூதியம் 1,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ள நிலையில், அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்களுக்கான சிறப்பு ஓய்வூதியம் 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட வேண்டும் என்ற ஊழியர்களின் கோரிக்கையினை ஏற்று, அவர்களுக்கான சிறப்பு ஓய்வூதியம் 1,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்மூலம் 56,830 சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் பயன் பெறுவர். இதற்காக 26,95,00,000 ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மகளிர் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

* * * * *